தற்போது அங்கீகரிக்கப்பட்ட சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு 50 சதவீத கட்டணச் சலுகையில் பயண அட்டை வழங்கப்பட்டு வருவதால், சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு இலவச பயண அட்டை வழங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். ராஜலட்சுமி அவர்கள்.

திருமதி ஆர். ராஜலட்சுமி: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மனுநீதிச் சோழன்கூட மணியோசை கேட்டால்தான் வந்து மக்கள் குறையைத் தீர்ப்பான். ஆனால், மக்களின் மனவோசைக்கிணங்க இன்று மெஜாரிட்டி அரசாங்கமாக அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்கள் மனவோசையைக் கேட்ட மாத்திரத்திலேயே ஓடிவந்து உதவி செய்துகொண்டிருக்கின்றார். இன்றைய மாணவர்கள்தான் நாட்டின் நாளைய தலைவர்கள் என்பார்கள். அதுபோல, இன்றைய சட்டக் கல்லூரி மாணவர்களே சட்டப் பேரவையின் நாளைய உறுப்பினர்களாகவும் ஆகக்கூடும். எனக்காக இதனைச் செய்து கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

60—

ஓமியோபதி பிரிவு

***5518—திரு. ஏ. லாசர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், காணாவிலக்கிலுள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஓமியோபதி பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?

2012 ஏப்ரல் 9]

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தற்போது தேனி மாவட்டத்தில் மாநில அரசு திட்டத்தின்கீழ் ஒரு ஓமியோபதி பிரிவு பெரியகுளத்திலுள்ள மாவட்ட தலைமை மருத்துவமனையிலும், தேசிய ஊரக சுகாதாரத் திட்டத்தின்கீழ் 2 ஓமியோபதி பிரிவுகள் எம்.சுப்புலாபுரம் மற்றும் தேவாரம் ஆகிய இடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. எனவே, தேனி மாவட்டம், கானாவிலக்கிலுள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஓமியோபதி மருத்துவப் பிரிவு ஏற்படுத்தும் கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை. இருந்தபோதிலும் வரும் காலத்தில் தேவைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை மாண்புமிகு அம்மாவின் அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

முற்பகல் 11–15

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், கானாவிலக்கில் இருக்கக்கூடிய மருத்துவக் கல்லூரியுடன்கூடிய மருத்துவமனையும், மருத்துவக் கல்லூரியும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இன்றைக்கு அது பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்களுக்கு, நோய்வாய்ப்பட்டவர்களுக்கு மிகப் பேருதவியாக இருந்து வரக்கூடிய ஒரு மருத்துவமனை. மாவட்டம் முழுவதும் இருக்கக்கூடியவர்கள் அங்கு வந்துபோய்க் கொண்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில், மருத்துவக் கல்லூரியும் அமைந்திருக்கக்கூடிய அந்த மருத்துவமனையில் பல்வேறு வைத்திய முறைகளைத் துவக்கினால், அந்த மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்கிற தன்மையில் இந்தக் கேள்வியை அரசின் முன், பேரவைத் தலைவர் மூலமாக வைத்தேன். மேலும்,*

மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வரக்கூடிய அந்த மருத்துவமனைக்குக் கடந்த 2 தினங்களுக்கு முன்பு நான் சென்று வந்ததினால், அரசினுடைய கவனத்திற்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கும் தெரியப்படுத்த வேண்டியது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், கேள்விக்கு வாருங்கள்.

திரு. ஏ. லாசர்: 5 ஆண்டுகள் எம்.பி., பி.எஸ்., படிப்பு முடித்தவர்கள் மேற்படிப்பு படிக்க சிறப்புப் பிரிவிற்கு அங்கேயே ஏற்பாடு செய்ய அரசு முயற்சித்தால் அந்தக் கல்லூரியும், அங்கு இருக்கக்கூடிய மருத்துவமனையும் ஏழை எளியோர்களுக்குச் சிறப்புப் பிரிவின்மூலம் வைத்தியம் செய்வதற்கு உதவியாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், நீங்கள் demand–இல் பேசுவதுமாதிரி இவ்வளவு விரிவாகப் பேசக்கூடாது. கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ஏ. லாசர்: எனவே அதுபற்றியும் அரசு பரிசீலிக்க வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதோடு, அங்கே M.R.I. Scan–ம் இல்லை; எனவே, அதுகுறித்தும் அரசு பரிசீலிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் தேவைக்கேற்பவும், அரசினுடைய நிதிநிலையைப் பொறுத்தும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]